# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **D.A.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Cell. 9600824414
Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

பகவானுக்குப் பல நாமங்கள் உண்டு. ஆனால் நம் சர்ச்சைக்கு இன்று நாம் எடுத்துக் கொள்ளப் போவது ஒன்று. அது கோபால க்ருஷ்ணன் என்பது. பசுக்களைக் காக்கும் கண்ணன் என்பது அதன் பொருள். திவ்ய தேசமாகிய தேரழுந்தூரில் பக்கத்தில் பசுங்கன்றோடு நின்றருளும் பகவானுக்கு ஆமருவியப்பன் என்பது திருநாமம். 'ஆக்களை அதாவது பசுக்களை காக்கும் அப்பன்' என்பது விளக்கம். இதைப் பேச்சு வழக்கில் சொல்லுவதனால் மாடு மேய்க்கிறவன் என்பது அதற்குப் பொருத்தமான சொற்றொடராகும். பள்ளிக் கூடத்தில் படிப்பு வராத பையனை ஏசுவதற்கு ஆசிரியர் இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தி 'நீ மாடு மேய்க்கத் தான் லாயக்கு' என்பார்.

மாடு மேய்ப்பது, இன்று நமக்கு கேவலமாகத் தெரிகிறது. ஆனால் அன்று பகவான் அப்படி நினைக்கவில்லை. தன்னை மாடு மேய்ப்பவனாக பக்தர்கள் அழைக்கட்டும் என்று அந்தப் பெயரை ஆன்றோரின் அரும் வாக்காக அவன் அங்கீகரித்து விட்டான். புடவை கேட்டுக் கதறிய திரௌபதியும் அவனை கோபாலா! கோவிந்தா ! என்று தான் அழைத்தாள். மாடு மேய்ப்பதை நிறுத்தி, கண்ணன் மன்னனான பிறகும் அவனை அந்தப் பெயர் சொல்லித்தான் அழைத்தாள். ஆதற்காக அவன் கோபித்துக் கொள்ள வில்லை. அவள் கேட்டபடி புடவையைக் கொடுத்தான். துச்சாசனனுடைய கைகள் ஓயும் வரை சேலைகளை மலை மலையாய் கொட்டிக் குவித்தான். ஏனென்றால் மாடு மேய்ப்பதை அவன் கௌரவமாக எண்ணினான். காரணம் அது அவன் குலத்தொழில். குலத்தொழிலைச் செய்வது கேவலமா? வேதம் ஓதவதை வெறுக்கும் பிராம்மணரும், நாட்டுக்காக உயிர் கொடுப்பதைப் புறக்கணிக்கும் க்ஷத்ரியரும், பண்டங்கள் பரப்பி கடைவிரித்து வியாபாரம் செய்வதைக் கீழ் என்று நினைக்கும் வைசியரும், பயிர்த் தொழிலை மட்டம் என்று ஒதுக்கும் வேளாளரும் இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

திருவல்லிக்கேணியிலே நின்றருளும் எம்பெருமான் கீதாசார்யனை அனைவரும் பார்த்தஸாரதி என்று அழைக்கிறோம். அந்த நாமத்துக்குப் பொருள் என்ன? அர்ஜுனனுக்குத் தேரோட்டி ? (Driver of Arjuna) என்பதல்லவா அதன் பொருள்?! நம்மில் யாராவது நமக்குச் சம அந்தஸ்து உள்ளவர்களுக்கு நம்மைக் காரோட்டி என்று சொல்லிக் கொள்ள விரும்புவோமா? ஆனால் கண்ணன் விரும்பினான். காரணம், செய்யும் வேலை எதுவும் கேவலமல்ல என்ற உண்மையை உணர்ந்தவன் அவன்; உணர்த்துபவன் அவன்.

நமக்கு வருமானம் தரும் தொழில் எதுவானாலும் அது நியாயத்துக்கும் தருமத்துக்கும் புறம்பானதாக இல்லாவரை உயர்ந்த தொழில்தான்! சங்க காலத்தில் தானியம் விற்றுப் பிழைத்த ஒரு புலவர் அதைத் தன் பெயருக்கு முன்பு பெருமையாகப்

போட்டுக் கொண்டார். மதுரை கூலவாணிகன் சீத்தலை சாத்தனார் தான் அவர். கூலவாணிகன் என்றால் தானிய வியாபாரி என்பது பொருள். அதை அவர் குறைவாக நினைக்கவில்லை. அரசவைப் புலவர் என்று சொல்லிக் கொள்வது தான் பெருமை என்றும் தானிய வியாபாரி என்று கூறிக் கொண்டால் மட்டம் என்றும் அவர் நினைத்திருந்தால் தன்னைப் பற்றி அவர் அப்படி கூறிக் கொண்டிருக்கமாட்டார்.

வடக்கே பண்டரிநாதனின் பக்தர்களில் ஒருவராய் இருந்து மஹான் என்று மன்னனால் வணங்கப்பட்ட ஒருவர் சேனா நாயகர். இவர் பார்த்த தொழில் முடிநீக்கும் நாவிதம். முனிவர்கள் வணங்கிய தர்ம வியாதன் என்பவனுடைய தொழில் இறைச்சி விற்பனை. கோரா என்ற மஹான் செய்த தொழில் மண்பானை செய்து விற்பது. குறும்பறுத்த நம்பியும் அப்படியே.!

தொழிலில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் மனப்பான்மை நம்மால் புகுத்தப்பட்டது–கடந்த ஓரிரண்டு நூற்றாண்டுகளுக்குள்! 'டாக்டர் ஆவேன், வக்கீல் ஆவேன், ஆடிட்டர் ஆவேன், இஞ்சினீயர் ஆவேன், அமெரிக்காவில் கம்ப்யூட்டர் இயக்கி டாலர் கணக்கில் சம்பாதிப்பேன்', என்ற வறட்டு கௌரவம் சமீப காலமாகத் தான் நம்மை ஆட்டி வைக்கும் பிசாசாக உருவெடுத்திருக்கிறது. இதன் விளைவென்ன? ஒரு குறிப்பிட்ட வகையான தொழிலுக்கும் படிப்புக்கும் மட்டுமே கிராக்கி. எத்தனையோ பயனுள்ள அடிப்படையான தொழில்கள் புறக்கணிக்கப்படுகின்றன. அவற்றுக்குச் சமுதாயத்தில் மதிப்பில்லை. திருமணச் சந்தையில் மரியாதையில்லை. இதனால் இந்தியச் சமுதாயமே சமச்சீர் நிலை குலைந்து பணவீக்கம் பொருளாதாரமுடக்கம், நியாயமற்ற வறுமை இவற்றால் பாதிக்கப்பட்டு, சுருண்டு கிடக்கிறது. இதுதான் இந்து தர்மம் காட்டிய பாதையா? வேதங்களும் ஸ்ம்ருதிகளும் இதைத்தான் போதிக்கின்றன என்று யாராவது நிரூபிக்க முடியுமா? நம் பண்டைய சமுதாயத்தில் தொழிலால் பாகுபாடுகள் இருந்தன. ஆனால் உயர்வு தாழ்வில்லை. ஞானமும் அறிவும் ஓங்கிய இடத்திலெல்லாம் சன்மானங்களும் சத்காரங்களும் குவிந்தன. அந்தப் பின்னணியில் எந்தத் தொழில் செய்யப்பட்டாலும் அது மதிக்கப்பட்டது. திருவள்ளுவர் நெசவுத் தொழில் செய்ததாக நமக்குச் சரித்திரம் கூறுகிறது. நாட்டுக்கு நன்மை பயக்கும் நூல்களை வழங்கிய மேலோர் அந்தக் காலத்தில் பல்வேறு தொழில் பின்னணியில் இருந்து செயல்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன.

மற்கொண்ட திண்புயத்தான்
  மாநகர் விட்டிங்கு வந்தேன்
சொற்கொண்ட பாவின்
  சுவையறிவார் ஈங்கிலையே
விற்கொண்ட வாணுதலாள்
  வேலிதரும் கூலி
நெற்கொண்டு போமளவும்
  நில்லாய் நெடுஞ்சுவரே.

என்ற தனிப்பாடலில், வருமானம் இல்லாத காலத்தில் கம்பன் சுவர்கட்டும் கொத்தனார் வேலை பார்த்ததாக அறிகிறோம்.

இன்று நாடெங்கும் தலை விரித்தாடும் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு ஒரே தீர்வு என்னவென்றால் செய்யும் தொழிலில் உயர்வு தாழ்வு கற்பிக்காமல் 'செய்யும் தொழிலே தெய்வம்' என்று அனைத்துத் தொழில்களையும் ஏற்றுக் கொண்டு வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டு குலத்தொழில் என்று ஒன்று இருந்தால் அதை கைக்கொண்டு மக்கள் பொருள் ஈட்ட முயற்சி செய்வதேயாகும். இதுதான் நமக்கு வைதிகம் காட்டும் பாதை. வீண் கற்பனைகளை உதறி எறிவோம். வேலையில்லா திண்டாட்டத்தை ஒழிப்போம்!